பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விழியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 24 திங்கட்கிழமை 06.04.2020 கதிர் 152

இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள சமயத்தில் கொரோனாப்பேரிடர்வந்துவிட்டது.

இனி எப்போது இந்தத் தேர்தல் நடக்கும், சட்டம் என்ன சொல்லுகின்றது என்பவை தொடர்பில் பல பேச்சுகள், கருத்துக்கள் முன் வைக்கப்படுகின் பக்கம் 02 »

# நேற்று மட்டும் 14 பேருக்கு கொரோனா!

## பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் எகிறுகின்றது

கொழும்பு, ஏப்.06

கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டும் 14 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண் ணிக்கை 176 ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது. பக்கம் 02 »

## துர்க்கை அம்மன் ஆலயத்தின் தொண்டர் மின் தாக்கிச் சாவு!



யாழ்ப்பாணம், ஏப்.06

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் தொண்டரான குடும்பத் தலைவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

மல்லாகம் துர்க்காபுரத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் பக்கம் 04 »

## ஊரடங்குக் கைது 14,268ஐ எட்டியது

ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் கடந்த 24 மணிநேரத்தில் 552 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் இன்று வரையான காலப்பகுதியில் 14,268 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் காவல்துறை ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் 3,563 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது

## ஊரடங்கில் கடற்கரையில் நின்ற வெளிநாட்டவர்கள் 6பேர் கைது

மாத்தறை, திக்கவெல்ல – ஹிரிகெட்டிய கடற்கரையில் இருந்த ஆறு வெளிநாட்டவர்கள் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் திக்வெல பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் நேரத்தில் வெளிநாட்டவர்களை ஹோட்டல் வளாகத்திற்குள் வைத்திருக்குமாறு ஹோட்டல் உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ள போதிலும் அந்த அறிவிப்பை அவர்கள் சரியான முறையில் பக்கம் 04 »

## கொரோனாவுக்கு எந்த மருந்தும் தாம் பரிந்துரைக்கவில்லையாம்

### உலக சுகாதார நிறுவனம் தெளிவுபடுத்தல்

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுக்கு சிகிச்சையளிக்க அல்லது குணப்படுத்த எந்தவொரு மாத்திரையையும் பரிந்துரைக்கவில்லை என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்டோருக்கு அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் மருந்து கண்டுபிடித்துவிட்டன என்று பல்வேறு செய்திகள் வெளியாகின்றன.

இந்த நிலையிலேயே கோரோனா வைரஸ் நோய்த் தொற்றுக்கு சிகிச்சையளிக்க அல்லது குணப்படுத்த எந்தவொரு மாத்திரையையும் பரிந்துரைக்கவில்லை என்று உலக சுகாதார நிறுவனம் தெளிவுபடுத்தியுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் நேற்று 15 பேருக்கு பரிசோதனை

### ஒருவருக்கும் தொற்று இல்லை

யாழ்ப்பாணம், ஏப். 06

யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை 15 பேரின் இரத்த மாதிரிகள் ஆய்வு கூடப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் எவருக்கும் கோரோனா தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் சந்தேகத்தின் பேரில் அனுமதிக்கப்பட்ட மூவரின் மாதிரிகள் பக்கம் 04 »

## கனடாவில் தமிழ் மருத்துவர் கொரோனாவால் உயிரிழப்பு

மொன்றியல், ஏப். 06

கனடாவில் கொரோனாவினால் பாதிக்கப்பட்ட தமிழ் வைத்தியர் ஒருவர் மரணமடைந்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

திலகன் என அழைக்கப்படும் 74 வயதான அன்ரன் செபஸ்ரியன் என்பவரே மரணமானார். ஒன்ராறியோ மாகாணத்தின் கிங்ஸ்ரன் வைத்தியசாலையில் அவர் ஆலோசகராகப் பணியாற்றுகிறார்.

ஏற்கனவே வைத்தியர் கடமையில் இருந்து இளைப்பாறியிருந்த இவர், கொரோனா வைரஸ் தாக்கத்தினால் ஏற்பட்ட வைத்தியர்களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் மீண்டும் கடமையில் இணைந்து கொண்டவர்.

சில வாரங்கள் கொரோனா வைரஸ் நோயாளர்களுக்கு சிகிச்சையளித்து வந்த இவரும் நோயின் தாக்கத்துக்கு உள்ளாகி மரணமடைந்துள்ளார்.

## ஊடரங்கு நீழப்பதால் நிவாரணம் அவசியம்

### அரசிடம் சுரேஷ் வலியுறுத்தல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப். 06

ஊரடங்கு உத்தரவை அரசு நீடித்துக் கொண்டு போவதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை அனைவருக்கும் கிடைக்கக் கூடிய வகையில் ஏற்பாடு செய்யவேண்டும் என கோரியுள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பக்கம் 02 »

## நாடாளுமன்று உடன் கூட்டப்படவேண்டும்

### சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தல்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஏப்.06

கொரொனோ வைரஸ் தாக்கத்தாலும் ஊரடங்கு நடைமுறையாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு பொறிமுறையொன்றை வகுத்துக் கொள்வதற்கும் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான தீர்மானத்தைச் சட்ட பக்கம் 02 »

## வாயை மூடிக்கொண்டு விமல் இருக்க வேண்டும்

### உறைக்க உரைக்கின்றார் மனோ



உயிர்காக்கும் முக்கிய மருந்துகளை இந்த இக்கட்டான சமயத்திலும் இந்தியா அவசர உதவியாக இலங்கைக்கு வழங்குகின்றது. பக்கம் 04 »

காலைக்கதிர்
Kalaikkathir



## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றன. எனக்குத் தெரிந்தவரையில், சட்டத்தைப் பற்றியே சிறிய விளக்கத்துடன், இயன்றவரை இலகு தமிழில், இந்த விடங்களை வாசகர்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

பொதுத் தேர்தலைப் பொறுத்தவரை பிரதானமாக இரண்டு வகையில் நடக்கலாம்.

ஒன்று – வழமையாக ஒரு நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிவடையும் போது நடத்தப்படுவது.

அடுத்தது – முற்கூட்டியே அது கலைக்கப்படுவது.

முதலாவது சந்தர்ப்பத்தில் பொதுத் தேர்தலுக்கான திகதியைத் தீர்மானிப்பது வழமைபோல தேர்தல் ஆணையகத்துக்குரியதாகும். அதில் ஜனாதிபதி தலையிடமாட்டார். தலையிட முடியாது.

ஆனால், நாடாளுமன்றத்தை அதன் பதவிக்காலம் முடிய முன்னர் ஜனாதிபதி கலைத்தால், அதையடுத்துப் பொதுத் தேர்தல் நடத்தும் திகதியையும் அடுத்த – புதிய – நாடாளுமன்றத்தைக் கூட்டும் காலத்தையும் ஜனாதிபதி அறிவிக்க வேண்டும். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் புதிய நாடாளுமன்றம் கூட வேண்டும் என்பது சட்ட விதி.

தேர்தலை நடத்துவதற்கான திகதியை ஜனாதிபதி அறிவித்து விட்டால் அத்திகதியில் தேர்தலை நடத்துவது தேர்தல் ஆணையத்தின் வேலை.

அதுதான் இப்போதும்.

எனினும், ஏதேனும் ஒரு காரணத்திற்காக ஒரு தேர்தல் மாவட்டத்திற்கான தேர்தலை ஒத்திவைத்து, புதிய திகதியில் நடத்துவதற்கும் தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உண்டு.

இந்த அதிகாரத்தைத்தான் தேர்தல் ஆணையம் இப்போது பிரயோகித்திருக்கின்றது. அதன்படி இலங்கையின் 24 தேர்தல் மாவட்டங்களுக்குமான தேர்தல்களை – ஒவ்வொன்றாக வரிசைப்படி – அது ஒத்திவைத்துள்ளது.

இங்குதான் ஒரே நாளில் நடத்தப்பட்ட வேண்டிய பொதுத் தேர்தல், மாவட்ட ரீதியான தேர்தலாகப் பிரிக்கப்படும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

பொதுவாக நாடு முழுவதும் பொதுத் தேர்தல் நடக்க, ஏதேனும் ஓரிரு மாவட்டங்களில் தேர்தலை ஒத்தி வைக்க வேண்டிய தேவை வந்தால் அதனைத் தேர்தல் ஆணையம் பிரயோகிக்கவே இந்த சட்ட விதி.

இதனை இப்போது நாடு முழுவதுக்குமான, முழு மாவட்டங்களுக்கும் தனித்தனியாகப் பிரயோகித்துள்ளது தேர்தல் ஆணையம்.

இப்படி ஒத்திவைக்கப்பட்ட தேர்தலை, அது ஒத்திவைக்கப்பட்ட தினத்திலிருந்து 14 வேலை நாள்களுக்கு அப்பால் ஒரு தினத்தில் தேர்தல் ஆணையம் திகதியை நிர்ணயித்து நடத்த முடியும்.

இங்கும், 24 தேர்தல் மாவட்டங்களுக்கும் (அதாவது முழு நாட்டுக்கும்) அது அப்படி ஒரு திகதியை நிர்ணயித்து – மாவட்ட ரீதியாக 24 மாவட்டங்களுக்கும் அறிவித்தல் விடுத்து – அத்திகதியில் இத்தேர்தலை நடத்த முடியும்.

ஆனால், அப்படி ஒரு திகதியை தேர்தல் ஆணையம் தெரிவு செய்யவில்லை. மாறாக, நாட்டில் ஒரு தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை இல்லை என்பதால் அது குறித்து உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெறுங்கள் என்று எழுத்து மூலம் ஜனாதிபதிக்கு அறிவித்து விட்டு அது அமைதியாகி விட்டது.

இந்தப் பின்புலத்தில்தான் ஜனாதிபதிக்கு இவ்விடயத்தில் அதிகாரம் வருகின்றது. நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் 113ஆவது பிரிவின் கீழ் இந்த அதிகாரம் ஜனாதிபதிக்கு வருகின்றது.

அதுவும், ஒரு நாடாளுமன்றத்தின் வழமையான பதவிக் காலம் முடிந்த பின்னர் தேர்தல் ஆணையம் தீர்மானித்த திகதியில் நடத்தப்படும் பொதுத் தேர்தலில் அல்ல. மாறாக, ஜனாதிபதியால் நாடாளுமன்றம் முற்கூட்டியே கலைக்கப்பட்டு, அவரினால் தேர்தல் திகதி நிர்ணயிக்கப்பட்ட பொதுத் தேர்தலில்தான் இந்த அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

அதன்படி –

திகதி நிர்ணயிக்கப்பட்ட ஒரு மாவட்டத்துக்கான தேர்தல் அத்திகதியில் நடைபெறாமல் போனால் அந்த மாவட்டத்துக்கான புதிய தேர்தல் திகதியை ஜனாதிபதி அறிவிக்கலாம் என்பதுதான் அந்த 113ஆவது சட்ட விதி.

இங்குதான் தேர்தல் திகதியை மாவட்ட ரீதியாகத் தீர்மானிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு வருகின்றது.

இப்போதைய நிலைமையைப் பொறுத்தவரை தேர்தல் நடத்துவதற்கான திகதியாக ஏப்ரல் 25ஐ அவர் அறிவித்துள்ளார். அத்திகதியில் ஏதேனும் ஒரு மாவட்டத்தில் தேர்தல் நடக்காமல் போனால்தான் அங்கு புதிய திகதியை அந்த மாவட்டத்துக்கு அறிவிக்க முடியும். அந்த அதிகாரம் அவருக்கு வரும்.

அதனால்தான் ஏப்ரல் 26ஆம் திகதி வரை அவர் காத்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. அன்றுதான் நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 113ஆவது பிரிவின் கீழான அதிகாரத்தை அவர் பிரயோகிக்க முடியும்.

மாவட்ட ரீதியாகப் புதிய தேர்தல் திகதியை அறிவிக்க முடியும் என்பதால், அவர் அதற்குப் பின்னர் கட்டம் கட்டமாக – மாவட்டம், மாவட்டமாக – வெவ்வேறு திகதிகளில் தேர்தலை நடத்தலாம் எனத் திகதிகளை அறிவிக்க முடியும்.

எது, எப்படி என்றாலும் எல்லா மாவட்டங்களிலும் தேர்தல்களை நடத்தி முடிவுகளை ஜுன் 2ஆம் திகதிக்கு முன்னர் புதிய நாடாளுமன்றம் கூடக் கூடியதாக அவர் அறிவிக்க வேண்டியிருக்கும். அதுதான் சட்ட விதி.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களில் அது கூட வேண்டும் என்பது சட்ட விதி.

ஜனாதிபதித் தேர்தல் நடக்கவிருக்கையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் மாத்திரம் இந்த மூன்று மாத கால அவகாசம் நான்கு மாதங்களாக முடியும்.

எனவே, மார்ச் 2ஆம் திகதி கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் இடத்துக்கு ஜுன் 2ஆம் திகதிக்கு முன்னர் புதிய நாடாளுமன்றம் கூட வேண்டும்.

ஆகையால் –

முதலில் தேர்தல் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட ஏப்ரல் 25ஆம் திகதி கடந்ததும், அடுத்த நாளுக்குப் பின்னர் புதிய தேர்தல் திகதியை – அல்லது திகதிகளை – ஜனாதிபதி அறிவிக்க முடியும். அறிவிப்பார்.

மூலத் திகதியிலிருந்து (ஏப்ரல் 25ஆம் திகதியிலிருந்து) 14 வேலை நாள்கள் கடந்த பின்னர் – அதாவது மே 19 ஆம் திகதிக்குப் பின்னர் – ஜுன் 2ஆம் திகதியில் புதிய நாடாளுமன்றம் கூடக் கூடியதாகத் தேர்தல்களுக்கான திகதியை அல்லது திகதிகளை அவர் அறிவிப்பார்.

ஒத்திவைக்கப்பட்ட தேர்தலுக்கான திகதி என்பதால் அதனை மாவட்ட ரீதியாக அவர் அறிவிக்க சட்டத்தில் இடமுண்டு.

ஆகவே, மே 19 இற்கும் 31இற்கும் இடைப்பட்ட திகதிகளில் மாவட்ட ரீதியில் தேர்தல் திகதிகளை அவர் அறிவிக்க முடியும்.

சரி, அந்தத் திகதிகளிலும் தேர்தலை நடத்த முடியாத நிலைமை நிலவினால் –

அல்லது தேர்தலை அத்திகதிகளிலும் நடத்த முடியாது எனத் தேர்தல் ஆணையம் தீர்மானித்துத் தள்ளிப் போட்டால் –

நிலைமை என்னவாகும்?

அதற்கு சட்டத்தில் எந்த ஏற்பாடும் இல்லை.

ஒரு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாதத்திற்குள் (ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்படுமாயின் நான்கு மாதத்திற்குள்) புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தும் அரசமைப்பு, அத்திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்த முடியாவிட்டால் என்ன செய்வது என்பதற்குத் திட்டவட்டமான வரையறை எதையும் தரவில்லை.

அத்தகைய சூழலில் அரசமைப்பு நெருக்கடிதான் ஏற்படும். அதற்காகத்தான் – இத்தகைய நெருக்கடி நிலைமைகளை எதிர்கொள்வதற்கான சட்ட எற்பாடுகளை நேர் சீர் செய்வதற்காகத்தான் – கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுங்கள் என்ற கோரிக்கை ஜனாதிபதி முன் வைக்கப்படுகின்றது.

ஆனால் அது செவிடன் காதில் ஊதிய சங்கு ஆகுமானால் யார்தான், என்ன செய்ய முடியும்?

–மின்னல்–

## நாடாளுமன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியாக எடுப்பதற்கும் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டியது அவசியம்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன்.

இன்றுள்ள நிலைமையில் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதனூடாகவே பல்வேறு விடயங்களுக்கும் சரியானதொரு தீர்மானத்தை அரசு எடுக்க முடியுமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்டப்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு குறிக்கப்பட்ட ஒரு காலத்திற்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதும் அதேபோல புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டுமென்பதும் ஏற்கனவே அரசியல் சாசனத் திற்கிணங்க அறிவிக்கப்பட்ட விடயங்களாக இருக்கின்றன. அதன் பிரகாரம் ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தல் நடந்திருக்கவேண்டும். மே மாதம் நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் உலகத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய முக்கயமான கொரோனோ வைரஸ் பிரச்சினை என்பது இலங்கையையும் பாதித்திருக்கிறதென்பதால் தேர்தல் நடத்த முடியாத சூழ்நிலை இருப்பதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்திருப்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான்.

இந்த நிலையில் எப்போது கொரோனோ வைரஸ் பிரச்சினை தீரும், மக்கள் எப்போது சுமூகமான நிலைமைக்கு வருவார்கள் என்பது யாருக்குமே தெரியாத நிலைமை இருக்கின்றது. இலங்கையின் பல பகுதிகளும் தொடர்ச்சியான ஊரடங்குச் சட்டத்திற்குள் இருக்கின்றன.

குறிப்பாக வடக்கு மாகாணத்தின் யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை மிக நீண்ட நாள்களாக தொடர்ச்சியாக ஊரடங்குச் சட்டத்துக்குள் நாங்கள் இருந்து வருகின்றோம். அதனால் எந்தவொரு விடயத்தையும் செய்ய முடியாத சூழ்நிலையில் தான் நாங்கள் இருக்கிறோம்.

இவ்வாறான சூழ்நிலையில் தேர்தலை நடாத்துவதென்பது முடியாத காரியமெனத் தேர்தல் ஆணையாளரே அறிவித்திருக்கிறார் என்பது ஏற்கனவே ஊடகங்களில் வந்திருக்கிறது.

அதே சமயம் தேர்தல் ஆணையாளர் இன்னுமொரு விடயத்தையும் கூறியிருக்கின்றார். அதாவது இந்த விடயத்துக்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார். அதற்கு நாடாளுமன்றம் கூடி இந்த விடயங்களைச் செய்ய வேண்டுமென்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாக இருக்கிறது.

ஆனால் இந்த நாடாளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பாக இப்போது ஆளுந்தரப்புக்குள் உள்ள ஜனாதிபதியோ பிரதமரோ பெரியளவில் அக்கறை கொண்டிருப்பவர்களாகத் தெரியவில்லை. தேர்தலை நடத்த வேண்டுமென்று அவர்கள் விரும்பலாம். ஆனால் தேர்தலை நடத்தக் கூடிய சூழ்நிலை இருந்தால் மாத்திரம்தான் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

அவ்வாறான சூழ்நிலையில் இப்போது நாட்டில் மிக மோசமாக கொரோனோ வைரஸ் தாக்கத்தால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். குறிப்பாக ஊரடங்கால் பசி, பஞ்சம், பட்டினி போன்ற நிலைமைகள் ஏற்பட்டிருப்பதால் இவற்றிலிருந்து அவர்களை மீட்டெடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

ஆகவே நாடாளுமன்றத்தைக் கூட்டி அந்த மக்களுக்கான நிவாரணங்களை, உதவிகளைச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பசி, பஞ்சத்தால் மக்கள் உணவு தேடி அலையும் ஒரு சூழ்நிலை ஏற்படக்கூடாது.

ஆகவே முதன்மையாக அந்த மக்களின் நன்மை கருதி, அது சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் யாராக இருந்தாலும் கூட – இந்த ஊரடங்குச் சட்டத்தினாலும் கொரோனோ வைரஸ் பிரச்சினையாலும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய ஏழை மக்களுக்கு நிவாரணங்கள் கிடைக்கவேண்டுமென்ற அடிப்படையிலாவது நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். அதனூடாக இந்த மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படவேண்டும்– என்றார்.

## ஊடரங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறேமச்சந்திரன், இது தொடர்பான அறிவுறுத்தல்களையும் அரச அதிகாரிகளுக்கு வழங்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனோ வைரஸ் தாக்கத்தை தடுத்து இப்பொழுது ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு ஏறத்தாழ இரண்டு வாரங்கள் முடிந்து விட்டன. இந்த இரண்டு வாரங்களாகக் கூலித் தொழிலுக்குப் போகும் யாருக்கும் வேலை வாய்ப்புக்கள் கிடையாது. அன்றாடம் அவர்கள் வேலைக்குப் போனால் மாத்திரம்தான் அவர்களது வீடுகளில் அடுப்பு எரியும் என்ற சூழ்நிலை இருக்கிறது.

எனினும் அந்த மக்களுக்கு அரசு நிவாரணங்கள் எதனையும் வழங்கவில்லை. ஆனால் இப்போதுதான் சமுர்த்தி ஊடாக சில உதவிகள் கொடுப்பதற்கு ஆரம்பிக்கிறார்கள் எனச் சொல்லப்படுகிறது. அது எவ்வளவு தூரம் முழுமையாக மக்களைச் சென்றடையும் என்பதும் கேள்விக்குறியாகவும் இருக்கின்றது.

ஆகவே முதலாவதாகத் தான் கொடுக்கும் நிவாரணங்களை இயன்றவரை பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும்.

குறிப்பாக கிராம சேவகர்களோ அல்லது பிரதேச செயலாளர்களோ, உள்ளூராட்சி உறுப்பினர்களோ என எல்லோரும் சேர்ந்து அனைத்து கஷ்டப்பட்ட மக்களுக்கும் இந்த நிவாரண உதவிகள் சென்றடைவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதனை விருப்பு வெறுப்பின்றி அனைவருக்கும் கிடைக்கக் கூடிய வகையிலான ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது அவசியமானது.

பல்வேறுபட்ட தனிநபர்களும், அரசியல் கட்சிகளும், சமய ஸ்தாபனங்களும், தங்களால் இயன்றவரை தற்போது மக்களுக்கு உதவி செய்கின்றார்கள். இவ்வாறான மிக இக்கட்டான நிலையில் தாங்கள் தாங்களாகவே முன்வந்து பல்வேறுபட்ட ஆலயங்களும் சரி, பல்வேறுபட்ட ஸ்தாபனங்கள், தனிநபர்கள் என எல்லோருமே பல உதவிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆகையினால் அவர்கள் அனைவருக்கும் நாங்கள் நன்றி கூறுகின்றோம். ஆனால் அந்த உதவிகள் கூட ஒருநாள், இரண்டு நாள் தேவைகளைக் கூட பூர்த்தி செய்யக் கூடிய உதவிகளாக இல்லை என்பதுதான் உண்மை.

ஆகவே ஊரடங்கு உத்தரவை அரசாங்கம் நீடித்துக் கொண்டு போகின்ற அதே நேரம் கஷ்டப்பட்ட, பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை அனைவருக்கும் கிடைக்கக் கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியமானது. இந்த விடயம் தொடர்பாக கிராம சேவகர்களுக்கும் கிராம மட்டங்களில் வேலை செய்கின்ற அனைவருக்கும் சரியான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் நாங்கள் கருதுகிறோம் – என்றார்.

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு, புத்தளம், கம்பஹா பகுதிகளிலேயே இந்தச் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. நேற்றுக் காலை முதல் இரவு வரை 14 பேர் தொற்றுக்குள்ளான நிலையில் கண்டறியப்பட்டனர்.

இந்த 176 பேரில் 33 பேர் முழுமையாகச் சுகமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

140 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றமையுடன் அவர்களில் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் அதிதீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நாடு முழுவதுமுள்ள 22 வைத்தியசாலைகளில் 259 பேர் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.





# சித்தாண்டியில் கஞ்சாக்காடு அதிரடிப்படை சுற்றிவளைப்பு



செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சித்தாண்டி சந்தனமடு காட்டுப் பகுதியை நேற்று முற்றுகையிட்ட வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினர் அங்கு கஞ்சா தோட்டம் ஒன்றைக் கண்டு பிடித்தனர். அங்கிருந்து கசிப்பு கொள்கலன் ஒன்றிசியும் அவர்கள் மீட்டனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து எட்டு இராணுவஒ புலனாய்வு அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் கஞ்சா தோட்டம் மற்றும் கசிப்பு கொள்கலன் என்பன வெவ்வேறு இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டன.

அங்கு பதினாறு கஞ்சாச் செடிகள் வளர்த்து வந்த நிலையில் காணப்பட்டன. கசிப்பு தயாரிப்பதற்கு ஆரம்ப நடவடிக்கை மேற்கொண்டு பதுக்கி வைக்கப்பட்ட கசிப்பு 210 லீற்றர் கொள்கலன் கைப்பற்றப்பட்டது.

இந்தச் செய்கையில் ஈடுபட்டு வந்த நபர்கள் தப்பி ஓடியுள்ளனர். இவர்கள் தொடர்பான விசாரணைகளை இராணுவஒ புலனாய்வு அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# அத்தியாவசியப் பொருள்களின் பெயரில் திருமண அழைப்பிதழ் விநியோகித்தவர்!

## அலவத்துக்கொட பொலிஸாரால் கைது

கொழும்பு,ஏப்.06

மக்களுக்கு அத்தியாவசிய பொருள்களை எடுத்துச் செல்ல வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பயன்படுத்தி தனது சகோதரியின் திருமண அழைப்பிதழ்களை விநியோகித்து வந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரை நேற்றுத் தாங்கள் கைது செய்தனர் என அலவத்துக்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் நேரத்தில் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களை ஏற்றிச் செல்ல இந்த நபர் கார் ஒன்றை வாடகைக்கு பெற்றுக்கொண்டுள்ளார்.

அத்தியாவசிய சேவை என்ற அறிவிப்பை காட்சிப்படுத்தியவாறு சென்ற இந்த வாகனத்தை அலவத்துக்கொட பூஜாப்பிட்டிய வீதியில் மறித்து பொலிஸார் சோதனையிட்டுள்ளனர்.

அப்போது குறித்த வாகனத்தில் அத்தியாவசிய பொருள்களோ, அவற்றை எடுத்துச் சென்றமைக்கான அடையாளங்களோ இல்லாத காரணத்தினால், பொலிஸார் வாகனத்தை சோதனையிட்டுள்ளனர்.

அப்போது, வாகனத்தை ஓட்டி வந்த நபர் தனது சகோதரியின் திருமண அழைப்பிதழ்களை விநியோகித்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேகநபரை கைது செய்த பொலிஸார், வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இலங்கை வம்சாவளிப் பிரஜை ஆஸியில் கொரோனாவுக்குப் பலி

ஆஸ்திரேலியா மெல்பேர்ன் நகரில் கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கை வம்சாவளிப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் கொரோனாவால் உயிரிழந்த முதல் இலங்கை வம்சாவளிப் பிரஜை இவர் ஆவார்.

ஆஸ்திரேலிய குடியுரிமை கொண்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 52 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.

# மாத்தறையிலும் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று

மாத்தறை - அக்குரெஸ்ஸ மலிதுவ பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று உள்ள ஒருவர் அடையாளம் காணப்பட்டமையை அடுத்து, அந்தப் பிரதேசத்திற்குச் செல்லும் கொஹூகொட பஹால மலிதுவ வீதி முற்றாக மூடப்பட்டுள்ளது.

அத்துடன் சுகாதார அதிகாரியின் ஆலோசனைக்கு அமைய பிரதேசத்தை தனிமைப்படுத்த அக்குரெஸ்ஸ சுகாதார அதிகாரி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றியுள்ள 42 வயதான நபரின் மனைவி, மூன்று பிள்ளைகளை பரிசோதனைகளுக்காக மாத்தறை கம்புறுகமுவை வைத்தியசாலைக்கு அதிகாரிகள் அனுப்பி வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தவிர அந்நபர் பழகிய மற்றும் சென்று வந்த 8 வீடுகளைச் சேர்ந்த நபர்களை சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளனர் எனசுகாதார அதிகாரியின் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றிய நபர், கடந்த 24ஆம் திகதி தனது வீட்டுக்கு வந்துள்ளார்.

இந்த நபர் சென்று வந்த இடங்கள் தொடர்பாக ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்க உள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர் ஜீ.ஏ. பிரேமரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# வதந்தி பரப்பிய பெண் கைதாம்!

## வாத்துவ பகுதியில் சம்பவம்



கொரோனா வைரஸ் தொடர்பில் சமூக வலைத்தளத்தில் உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிட்டு வந்தவர் எனக் கூறப்படும் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாத்துவ பகுதியைச் சேர்ந்த பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொடர்பில் போலி செய்திகளைப் பரப்ப வேண்டாம், அவ்வாறு பரப்புவோர் கைது செய்யப்படுவார்கள் என அறிவிக்கப்பட்ட போதும் இந்த நிலை தொடாவதாக குறிப்பிடப்படுகின்றது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அதிகளவு நோயாளிகள் அடையாளம் காணப்பட்ட மாவட்டம் கொழும்பு

கொழும்பு, ஏப். 06

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான அதிகளவு நோயாளிகள் அடையாளம் காணப்பட்ட மாவட்டமாக கொழும்பு பதிவாகியுள்ளது.

நேற்றைய நிலவரப்படி கொழும்பில் 42 பேரும் புத்தளத்தில் 27 பேரும் களுத்துறையில் 25 பேரும் கம்பஹாவில் 11 பேரும் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்தோடு யாழ்ப்பாணத்தில் 07 பேரும் கண்டியில் 06 பேரும் இரத்தினபுரியில் 03 பேரும் குறுநாகலில் 02 பேரும் காலி, கேகாலை, மட்டக்களப்பு மற்றும் பதுளை, மாத்தறை பகுதிகளில் தலா ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# வீடு திரும்பியவர்கள் மேலும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலை கடைப்பிடிக்கவும்!

கொழும்பு, ஏப். 06

தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களிலும் மற்றும் தமது வீடுகளிலும் தனிமைப்படுத்தப்பட்ட அனைவரும் மீண்டும் 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடுமாறு இராணுவத்தளபதி சவேந்திர சில்வா கேட்டுக்கொண்டுள்ளார்



காலியின் கராப்பிட்டியில் 14 நாள் தனிமைப்படுத்தப்பட்ட பின்னர் வீடு திரும்பிய ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால் அனைவரும் விழிப்புடன் இருக்கவேண்டும் என இராணுவத் தளபதி கோரிக்கை விடுத்தார்.

# கொரோனாவை குணப்படுத்த கடலட்டையின் இரத்தம்?

கொடிய கொரோனா வைரஸ் உலகளாவிய ரீதியில் வேகமாகத் தொற்றிக் கொண்டிருக்கும் நிலையில் அதற்கான மருந்தைக் கண்டுபிடிப்பதில் உலக விஞ்ஞானிகள் மற்றும் மருத்துவர்கள் தமக்குள் தனியாகவோ இல்லாமல் ஓர் அமைப்பாகவோ அக்கறை எடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் கடல் அட்டையின் இரத்தத்தின் மூலம் இதனைக் குணப்படுத்தலாம் என பிரான்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடலட்டையின் இரத்தம் கொரோனா நோயாளிகளிற்கான புதிய மருந்தாகப் பாவிக்கப்பட உள்ளது. கொரோனா நோயின் தீவிரத்தால், சுவாசச் சிக்கல் ஏற்பட்டு, ஒக்சிஜனின் அளவு பெருமளவு குறைவதால் சாவு ஏற்படுகின்றது. இதற்கு ஏற்ற புதிய மருந்தாகவே கடலட்டையின் இரத்தம் உபயோகப்படுத்தப்பட உள்ளது.

மனிதனின் இரத்தத்தில் உள்ள ஹேமோகுளோபின் தாங்கும் ஒக்சிஜனின் அளவை விட நாற்பது மடங்கு ஒக்சிஜனை கடலட்டையின் இரத்தத்தில் உள்ள ஹேமோகுளோபின் தாங்குவதாக அறியப்பட்டுள்ளது.

மனித உடலில் இந்த இரத்தம் ஏற்றப்பட்டுத் துல்லியமான பெறுபேறுகளும் சுவாசம் சீரானமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சிகிச்சை முறையை பிரான்ஸின் தேசிய மருந்துகள் மற்றும் சுகாதாரப் பொருள்களிற்கான நிறுவனம் மற்றும் தனிமனிதப் பாதுகாப்பிற்கான ஆணையம் ஆகியவை அங்கீகரித்துள்ளன.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## வங்குறோத்து நிலையில் நாடு

**நாட்டின் பொருளாதார நிலைமை மிக மோசமான கட்டத்தில் இருப்பதாக எச்சரிக்கப்பட்டிருக்கின்றது.**

**நேற்றைய மாலை இதழில் இப்பத்தியில் நாம் சுட்டிக்காட்டியபடி, அந்நிய செலாவணி வற்றி விட்டதால் வேறு வழியின்றி, எரிபொருள் மற்றும் மருத்துவப் பொருள்கள் தவிர ஏனைய பொருள்களின் இறக்குமதியை முற்றாகத் தடை செய்யும், வரலாற்று ரீதியில் முக்கியமான முடிவை இலங்கை அமைச்சரவை கடந்த வாரம் எடுத்தது.**

**அந்த முடிவை ஊடகங்களுக்கு அறிவிப்பதில் கூட ஆளும் தரப்புக்குள் குழப்பம் இருந்தமையை அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் காணக்கூடியதாக இருந்தது.**

**இறக்குமதிக்குத் தடை என்றால், இலங்கையிலிருந்து நாணயப் பரிமாற்றத்தின் கீழ் வெளிநாடுகளுக்கு நிதி செல்வதைக் கட்டுப்படுத்துவதுதான் என்பது பொருளாதாரம் அரிச்சுவடி படித்தவருக்கும் விளங்கும்.**

**இத்தகைய நிதிப் பரிமாற்றத்துக்கான தடை – கட்டுப்பாடு – முடக்கம் – வந்திருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன கூற, அதனை பின்னர் மற்றொரு அமைச்சரவை இணைப் பேச்சாளரான பந்துல குணவர்த்தன மறுத்துரைத்தார். ஆக, இறக்குமதிக்கான கட்டுப்பாடு பற்றி மட்டுமே அமைச்சரவை முடிவு செய்தது என்றார் அவர்.**

**எது, எப்படியோ வெளிநாட்டு நாணயபரிமாற்று நெருக்கடிக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் – திறைசேரிக் கையிருப்பு கரைந்துவிட்ட சூழலில் – வேறுவழியின்றி இத்தகைய முடிவை எடுக்க வேண்டிய நிலைக்கு அரசுத் தள்ளப்பட்டுள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.**

**தொடர்ந்தும் 'கடன் வாங்கிக் கலியாணம்' பாணியில்தான் இலங்கையின் நிதி நிலைமை இருந்து வந்திருக்கின்றது. மாறி, மாறி ஆட்சிக்கு வந்த இலங்கையின் அரசுகள் வெளிநாடுகளில் கையேந்திக் கடன் பெற்றமைதான் கடந்த காலக் கதை. ஏட்டிக்குப் போட்டியாக அரசுகளின் கடன் வாங்கும் படலம் தொடர்ந்தது.**

**கடந்த ஆண்டு இறுதியில் இலங்கையின் மொத்தக் கடன் சுமார் 5 ஆயிரத்து 600 கோடி அமெரிக்க டொலராக (சுமார் பத்துலட்சம் கோடி ரூபாவாக) இருந்தது.**

**இந்தக் கடனுக்கான தவணைக் கொடுப்பனவுகளை அவ்வப்போது வழங்குவதாக இன்னொரு நாட்டிடம் கையேந்துவதுதான் இலங்கை நிதி நிர்வாகத்தின் வழமையான பாணியாக இருந்து வந்துள்ளது.**

**ஏதோ ஒரு வகையில், எந்த நாட்டிடமாவது கெஞ்சி, புதிய கடனை வேண்டிய, பழைய கடனுக்கான தவணைக் கட்டணத்தை நமது நாடு செலுத்திவந்தது.**

**இந்த வரிசையில் இந்த ஒக்டோபரில் நூறு கோடி அமெரிக்க டொலரை (சுமார் 19 ஆயிரம் கோடி ரூபாவை) தவணைப் பணமாக உலக நாடுகளுக்கு இலங்கை செலுத்த வேண்டியிருக்கும்.**

**அண்மையில் சீனாவிடம் அரசு கையேந்திப் பெற்றுக் கொண்ட ஐந்து கோடி அமெரிக்க டொலரில் பெரும் பகுதி அதன் தற்போதைய நெருக்கடித் தேவைகளுக்கே போய் விட, அதில் ஏதும் இப்போதைக்கு அரசிடம் மிஞ்ச இடமில்லை. அதேசமயம் தற்போதைய சர்வதேச நெருக்கடி நிலைமை, பொருளாதார இக்கட்டுக்கு மத்தியில் புதிய நாடு எதுவும் இலங்கைக்குக் கடன் வழங்க மாட்டாது என்பதே பலரின் மதிப்பீடு.**

**இந்தச் சூழலில், இந்த ஒக்டோபரில் முதல் தடவையாக கடனுக்கான தவணைப் பணத்தைச் செலுத்த முடியாத கையறுந்த நாடாக இலங்கை மாறும் என சில எதிர்வுகள் கூறப்பட்டுள்ளன.**

**இவ்வாறு, இம்முறை கடன் செலுத்த முடியாத – வங்குறோத்து நிலைக்குச் செல்ல கூடிய – நாடுகளின் வரிசையில் நான்காவது இடத்தில் இலங்கையின் நிலைமை சர்வதேசத் தரப்புகளினால் எதிர்வு கூறப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. பட்டியலின் முதல் இடத்தில் ஹொண்டூரஸ் உள்ளது.**

**அப்படி ஒரு கையறு நிலைக்குச் செல்லாமல் மீள்வதற்கான வாய்ப்புகள் இலங்கையில் இல்லை என்றே தோன்றுகின்றது.**

# யாழ்ப்பாணம் உட்பட ஆறு மாவட்டங்களில் தளர்த்தப்படாமல் தொடர்ந்தும் ஊரடங்கு!

## ஏனைய 19 மாவட்டங்களில் இன்று 8மணி நேரம் தளர்வு

கொழும்பு,ஏப்.06

தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் யாழ் மாவட்டம் தவிர்த்த ஏனைய ஏழு மாவட்டங்களிலும் ஊரடங்கு உத்தரவு இன்று திங்கட்கிழமை காலை தற்காலிகமாக தளர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் இல்ஙகை முழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு, ஆறு மாவட்டங்களில் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

உயிர்கொல்லி கொவிட் 19 எனப்படும் கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தும் வகையில் ஸ்ரீலங்காவின் 25 மாவட்டங்களிலும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுவருகின்றது.

குறிப்பாக கொரோனா வைரஸ் தொற்று அதிகளவில் பரவக் கூடிய அபாயமுள்ள வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்ட கொழும்பு, களுத்துறை, கம்பஹா, யாழ்ப்பாணம், புத்தளம் மற்றும் கண்டி மாவட்டங்களில் மறு அறிவித்தல் வரை தொடர் ஊரடங்கு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் வடக்கிலுள்ள கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்கள் மற்றும் கிழக்கிலுள்ள மட்டக்களப்பு, திருகோணமலைமற்றும்அம்பாறைஆகியமாவட்டங்கள் உள்ளிட்ட 19 மாவட்டங்களில் இன்று ஊரடங்கு உத்தரவு தற்காலிகமாக தளர்த்தப்பட வுள்ளது.

இந்த 19 மாவட்டங்களில் இன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்தக் காலப் பகுதியில் மாவட்டங்களுக்கு இடையில் பயணங்களை மேற்கொள்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

எனினும் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அத்துடன் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காலப் பகுதியில் அதனை மீறும் வகையில் செயற்படுவோர் தண்டிக்கப்படுவார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டினுள் கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் வகையில் சுகாதார துறையில் வழங்கும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி மக்கள் செயற்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை அரச ஊழியர்கள் வீட்டில் இருந்து பணியாற்றும் காலத்தை அரசாங்கம் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வரை நீடித்துள்ளது.

ஏற்கனவே இரண்டு வாரங்களை வீட்டில் இருந்து பணியாற்றுவதற்கான காலமாக அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### வாயை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே இந்தச் சமயத்தில் விமல் வீரவன்ஸ போன்றோர் இந்திய எதிர்ப்பு கோம் எழுப்புவதை விடுத்து வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டும். அத்தகைய வேளை இது எனத் தெரிவித்துள்ளார மனோகணேசன்.

கொரோனாவுக்கு அப்பால், சிறுநீரக, நீரழிவு, இருதய, புற்றுநோய் வியாதிகளை எதிர்கொண்டுள்ள நோயாளர்கள், மருந்து தட்டுப்பாடுகள் காரணமாக இப்போதே தவிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

'மருந்து தட்டுப்பாடு நிலவுகிறது. கையிருப்பில் முக்கியமான மருந்துகள் இல்லை' என்று இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ள அவசர (ரீநுறீ) மருந்துப் பட்டியல் கோரிக்கையை ஏற்று, இந்திய அரசாங்கம் – இந்தியாவிலேயே மருந்து தேவைப்படும் இன்றைய சூழலிலும்கூட – மருந்துவகை, மூலப்பொருள்கள் சீனாவிலிருந்துதான் வரவேண்டும் என்ற நிலைமையிலும் கூட – நாம் கேட்ட மருந்துகளை 'அரசாங்கத்துக்கும் அரசாங்கத்துக்குமான பரிவர்த்தனை' என்ற அடிப்படையில் (அதாவது தனியார் இல்லை) – வழங்க முடிவு செய்துள்ளமையை அறிந்து நாம் இந்திய அரசுக்கு இலங்கையின் துன்பப்படும் அனைத்து மக்கள் சார்பாக நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

அதேவேளை எப்போதும், எதற்கும், 'இந்திய எதிர்ப்பு கோம்' எழுப்பும் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட நபர்களை, தயவு செய்து வாயை மூடிக்கொண்டு இருக்கும்படியும் அறிவுறுத்திறோம். – எனத் தெரிவித்துள்ளார் மனோ கணேசன்

### யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. அவர்கள் மூவருக்கும் கொரோனா தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துள்ளது என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரியாலை தேவாலயத்தில் சுவிஸ் போதகர் நடத்திய ஆராதனையில் பங்கேற்றவர்கள் என அரியாலை, குருநகர் மற்றும் கொழும்புத்துறை பகுதிகளில் வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள 12 பேரின் மாதிரிகள் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நேற்று பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன.

அவர்கள் 12 பேருக்கும் கோரோனா தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

### துர்க்கை அம்மன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தந்தையான சண்முகராஜ் செந்தூரன் (வயது– 51) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

ஆலயத்தொண்டர்கள்சிலர் இணைந்து மண்டபத்தைக் கொம்பிரசர் மூலம் தண்ணீர் பாய்ச்சி கழுவிக்கொண்டிருந்த போது, அதிலிருந்து மின் ஒழுக்கு ஏற்பட்டுள்ளது. இதன்போதே குடும்பத்தலைவருக்கு மின்சாரம் தாக்கியுள்ளது.

சம்பவத்தையடுத்து அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போது உயிரிழந்தார் என்று பொலிஸார் கூறினர்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக தெல்லிப்பழை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

### ஊரடங்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைப்பிடிப்பதில்லை என பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர்கள் நேற்று அதிகாலை வரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த உள்ளனர் என திக்வெல பொலிஸார் கூறியுள்ளனர்

## நாளை

**07.04.2020**
**செவ்வாய்க்கிழமை**

நட்சத்திரம்: உத்தரம் பி.ப 08.20
திதி : சதுர்த்தசி மு.ப 11.15
இராகுகாலம் : 03.07 - 04.37
சுப நேரம் : 10.37 - 12.07

# 45 மருத்துவ பணியாளர்கள் 95 பொலிஸாருடன் இறப்பு

## கொரோனா போராட்ட இழப்புக்கள் குறித்து சீனா அறிவிப்பு




சீனாவில் கொரோனாவுக்கு எதிரான போரில் 95 போலீஸ் அதிகாரிகளும், 46 மருத்துவ பணியாளர்களும் உயிரைத் தியாகம் செய்துள்ளனர் என்றுஅரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

சீனாவின் வுகான் நகரில் தான் கடந்த டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதன்முதலாக கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. அது நாடு முழுவதும் மின்னல் வேகத்தில் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. பின்னர் உலக நாடுகளுக்கு கொரோனா வைரஸ் பரவியது.

சீன நாட்டில் இதுவரை மொத்தம் 81 ஆயிரத்து 639 பேருக்கு கொரோனா வைரஸ் பாதித்தது. இந்த வைரஸ் தாக்கியதில் அங்கு 3 ஆயிரத்து 326 பேர் உயிரிழந்தனர் என அரசு புள்ளிவிவரங்கள் தெரிவித்தன.

இருப்பினும், சீனாவில் கொரோனா வைரஸ் பாதித்தவர்களுக்கு முன்னிலையில் இருந்து சிகிச்சை அளித்த மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ பணியாளர்கள், பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் பரவி ஏற்பட்ட உயிரிழப்புகள் பற்றி சீன அரசு வெளிப் படையாக எந்த தகவலும் வெளியிடவில்லை. 3 ஆயிரம் மருத்துவ பணியாளர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக மட்டும் கூறி இருந்தது.

இந்த நிலையில், சீனாவில் கொரோனா வைரசுக்கு எதிரான போரில் உயிரிழந்தவர்களுக்கு நினைவு அஞ்சலி செலுத்துகிற நிகழ்ச்சி, பீஜிங்கில் சனிக்கிழமை நடந்தது.

இந்த நிகழ்ச்சியின்போது, நாட்டில் கொரோனா வைரசுக்கு எதிராக நடந்த போரில் 95 பொலிஸ் அதிகாரிகளும், 46 மருத்துவப் பணியாளர்களும் தங்களது உயிரைத் தியாகம் செய்திருக்கிறார்கள் என்று அரசு சார்பில் முதன் முதலாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த தகவல்களை பீஜிங்கில் இருந்து வெளியாகிற சீன அரசின் 'குளோபல் டைம்ஸ்' நாளேடு வெளியிட்டுள்ளது.

## துருக்கி அரசுக்கு எதிராக போராடிய பாடகி சாவு!

### அரசு உதாசீனம் உயிரிழப்பில் முடிந்தது

துருக்கியில் அரசுக்கு எதிராக 288 நாட்களாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வந்த இளம் பாடகி ஹெலின் போலக் உயிரிழந்தார். இது அவரது ரசிகர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

28 வயதான இளம் பாடகி ஹெலின் போலக், நாட்டுப்புற இசையினை அடிப்படையாக கொண்டு பாடல்களை உருவாக்கும் 'குரூப் யோரம்' என்ற பிரபலமான இசைக்குழுவைச் சேர்ந்தவர்.

அரசுக்கு எதிரான புரட்சிகர கருத்துகளை பாடி வந்த 'குரூப் யோரம்' இசைக்குழுவை துருக்கி அரசு 2016ஆம் ஆண்டு தடை செய்தது. குழுவில் சிலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

அதனை தொடர்ந்து தங்கள் இசைக்குழு மீதான தடையை நீக்கவும், கைது செய்யப்பட்ட சகாக்களை விடுவிக்கக்கோரியும் உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கினார் ஹெலின் போலக்.

கடந்த மாதம் ஹெலினின் உடல்நிலை மிகவும் மோசமடைந்ததை தொடர்ந்து மனித உரிமை ஆர்வலர்கள் குழுவானது துருக்கி அரசிடம் ஹெலின் போராட்டம் குறித்துப் பேசியது.

ஆனால் ஹெலின் உண்ணாவிரத போராட்டத்தை நிறுத்தாமல், அவரது கோரிக்கைகளை பரிசீலிக்க முடியாது என துருக்கி அரசு கூறிவிட்டது. இதற்கிடையில் கடந்த 11ஆம் திகதி ஹெலின் வலுக்கட்டாயமாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

ஆனால் சிகிச்சைக்கு அவர் ஒத்துழைக்காததால் ஒரே வாரத்தில் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அதன் பின்னரும் அவர் அரசுக்கு எதிரான உண்ணாவிரத போராட்டத்தைத் தொடர்ந்தார்.

இந்த நிலையில் கடந்த 288 நாட்களாக உண்ணாவிரத போராட்டம் நடத்தி வந்த ஹெலின் போலக் நேற்று முன்தினம் அவரது வீட்டில் உயிரிழந்தார். இது அவரது ரசிகர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## பிரான்ஸில் தாதியர்கள் நிர்வாணப் போராட்டம்






பிரான்ஸில் கொரோனா சிகிச்சைக்கு தங்களை நிர்வாணமாக அனுப்புகிறார்கள் என தாதியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர்.

போதிய பாதுகாப்புக் கவசங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் இல்லாமல் தாம் பணியாற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறார் என்பதைக் காட்டும் குறியீடாகவே தாதியர்கள் இந்தப் போராட்டத்தைத் தொடக்கியுள்ளனர்.

தாதியர்கள் சிலர் நிர்வாணமாக புகைப்படங்களை வெளியிட்டு, கொரோனாவை எதிர்கொள்ள அரசு எங்களை நிர்வாணமாக அனுப்புகிறது என்ற குற்றச்சாட்டை அதில் எழுப்பியுள்ளனர்.

கொரோனாவால் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளில் பிரான்ஸும் ஒன்று. 90 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 7 ஆயிரத்து 560 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றுவதற்காக அங்கிருக்கும் மருத்துவர்களும், தாதியர்களும் போராடி வருகின்றனர். இந்த நிலையில், இந்த வாரத்தின் துவக்கத்தில், அரசுக்கு எதிரான இந்தப் போராட்டம் தொடங்கியது.

"அரசு நோயாளிகளுக்கும், எமக்கும் ஆபத்தை விளைவிக்கிறது. இதன் காரணமாகவே, இந்த தொற்று நோயை எதிர்கொள்ள அரசு எங்களை நிர்வாணமாக அனுப்புவதாகத் நாம் கருதுவதாலேயே நிர்வாணமாக இருந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க முடிவு செய்துள்ளோம்" தாதியர் ஒருவர் தெரிவித்தார்.

"எல்லோரும் பயப்படுகிறார்கள், ஏனெனில் நோயாளிகளைப் பார்க்கிறோம், அதன் பின் வீட்டிற்கு செல்கிறோம். சரியான பாதுகாப்பு உபகரணங் கள் இல்லாததால், நாமே அந்த நோயை வீட்டிற்கு கொண்டு வர முடியும் என்று நினைக்கின்றனர்.

நோயாளிகளுக்கு முறையாக சிகிச்சையளிப்பதற்கும், எங்களுக்கும் எங்கள் நோயாளிகளுக்கும் ஆபத்துக்களை ஏற்படுத்தாமல் இருப்பதற்கும், பொருத்தமான பாதுகாப்பு உபகரணங்கள் தேவை. உள்ளூர் மருத்துவ ஊழியர்கள் அரசிடமிருந்து பெற்றுள்ள முக மூடிகள் எல்லாம் பழைய முகமூடிகள். 15 முதல் 20 ஆண்டுகளாக நம் நாட்டின் சுகாதார துறை மோசமாக உள்ளது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சத்தமாகப் பேசிய 5 பேரையும் போட்டுத் தள்ளிய ரஷ்ய நபர்!

மொஸ்கோ, மார்ச் 6

தன்னுடைய வீட்டுக்கு வெளியே சத்தமாகப் பேசிக் கொண்டிருந்த 5 பேரைச் சுட்டுக் கொன்றார் ரஷ்ய கிராமவாசி ஒருவர். சனிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தலைநகர் மொஸ்கோவிற்கு தென் கிழக்கே 200 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள ஜெலட்மா என்ற கிராமத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதி தற்சமயம் ஊரடங்கு உத்தரவின் கீழ் உள்ளது. கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக ரஷ்யாவில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வீட்டுக்கு வெளியே நின்றிருந்தவர்கள் சத்தமாகப் பேசுவது தனக்கு இடைஞ்சலாக இருப்பதாக சந்தேக நபர் அவர்களிடம் முறையிட்டுள்ளார். இதைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. ஆத்திரமுற்ற சந்தேக நபர் தனது வேட்டைத் துப்பாக்கியை எடுத்து வந்து ஐவரையும் சுட்டுத் தள்ளினார் என்று பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த நான்கு ஆண்களும் ஒரு பெண்ணும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். அவரது குடியிருப்பு சோதனை செய்யப்பட்டு துப்பாக்கி கைப்பற்றப்பட்டது.

## அமெரிக்காவின் பொருளாதாரம் 74 ஆண்டுகள் பின்னோக்கி நகரும்

### கொரோனாவின் பாதிப்பால் வந்த வினை

அமெரிக்காவில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா பாதிப்புக் காரணமாக அந்த நாடு 74 ஆண்டுகளுக்கு முந்தைய பொருளாதார நிலைக்கு அமெரிக்கா சென்றுவிடும் என்று கூறப்படுகிறது.

அமெரிக்காவில் தான் தற்போது கொரோனா உச்சத்தைத் தொட்டுள்ளது. அங்கு 3 லட்சத்து 12 ஆயிரம் பேரை தாக்கி இருக்கிறது. இதுவரை 8 ஆயிரத்து 454 பேர் உயிரிழந்தனர். நேற்று ஒரே நாளில் மட்டும் ஆயிரத்து 480 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா நோய் தாக்குதலால் அமெரிக்காவின் பொருளாதாரம் கடும் பாதிப்பை சந்திக்கும் என்று பொருளாதார ஆய்வு நிறுவனமான 'மார்க்கன் ஸ்டான்லி' என்ற அமைப்பு கூறியுள்ளது. அதாவது 1946ஆ ஆண்டு பொருளாதார நிலை எப்படி இருந்ததோ, அந்த நிலைக்கு அமெரிக்கா சென்றுவிடும் என்று அந்த நிறுவனம் கூறியிருக்கிறது. அதாவது 74 ஆண்டுகளுக்கு முந்தைய பொருளாதார நிலைக்கு அமெரிக்கா சென்றுவிடும் என்று கூறப்பட்டுள்ளது.

தற்போதைய காலாண்டில் பொருளாதார வளர்ச்சி 3.4 சதவீதமாக சரியலாம் என்று கூறியிருக்கின்றனர். ஆனால் அடுத்த ஜூன் மாத காலாண்டில் 38 சதவீதம் சரியலாம் என்று அந்த நிறுவனம் கூறியுள்ளது. ஒட்டுமொத்தமாக 2020ஆம் ஆண்டில் 5.5 சதவீதம் பொருளாதார சரிவு ஏற்படும் என்று தெரிவித்துள்ளனர். உலகின் முன்னணி பொருளாதார நாடாக இருந்த அமெரிக்கா கடும் பொருளாதார வீழ்ச்சியை சந்திப்பது இதுவே முதல் முறையாகும்.

காலைக்கதிர் Kalaikathir



## 111 பேர் தனிமையில்

வர்த்தகர் ஒருவர் கொரோனா நோய் தொற்றுடன் 111 பேர்களுடன் அளவளாவி மகிழ்ந்துள்ளது தெரியவர அசாம் சுகாதார அதிகாரிகள் 111 பேரையும் அடையாளம் கண்டு தனிமைப்படுத்தியுள்ளனர்.

ஆனால் இவருக்கு கரோனா தொற்று உருவாவதற்குக் காரணமான, நோயுடன் சுற்றித்திரியும் அந்த நபரைக் காணவில்லை. தடம் காண முடியவில்லை.

நோய் தொற்று இருப்பதாக அடையாளம் காணப்பட்ட வர்த்தகர் டெல்லியில் இதனால் பாதிக்கப்படவில்லை. குவாஹாத்தியில்தான் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார். இவர் வாழும் பகுதியில் 150 குடும்பங்கள் உள்ளன. இவர்கள் வீட்டுத் தனிமையில் இருந்து வருகின்றனர். இந்த வர்த்தகருடன் தொடர்பிலிருந்த 111 பேரையும் அடையாளம் கண்டுள்ளனர் அதிகாரிகள். இவர்களிடமிருந்து சாம்பிள்கள் சேகரிக்கப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பெப்ரவரி 29ஆம் திகதி இவர் டெல்லியிலிருந்து வந்துள்ளார், லாக்டவுன் மார்ச் 24ம்தேதிதான் அறிவிக்கப்பட்டது, அதற்குள் இவர் எவ்வளவு நபர்களைச் சந்தித்திருக்கிறாரோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

## தமிழகத்தில் 571 பேருக்கு தொற்று

தமிழகத்தில் நேற்று மேலும் 86 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மொத்த எண்ணிக்கை 571 ஆக உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் கடந்த மாதம் 30ஆம் திகதி வரை கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. ஆனால், டெல்லியின் நிஜாமுதீன் பகுதியில் உள்ள மசூதி ஒன்றில் (நிஜாமுதீன் மர்காஸ்) தப்லிகி ஜமாத் என்ற இஸ்லாமிய மத அமைப்பு சார்பில் இஸ்லாமிய மத குருக்கள் பங்கேற்ற கூட்டம் கடந்த மாதம் நடைபெற்றது.

அதில் தமிழகம், தெலுங்கானா, காஷ்மீர் உள்பட நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் பங்கேற்றனர். தமிழகத்தில் இருந்து மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றது உறுதியானது.

அவர்களை கண்டுபிடித்து தனிமைப்படுத்தி பரிசோதனை செய்தனர். அப்போது அவர்களில் பெரும்பாலானோருக்கு கொரோனா இருந்தது தெரியவந்தது. இதனால் மார்ச் 31ஆம் திகதி முதல் தினந்தோறும் 50க்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று உறதி செய்யப்பட்டது. இதனால் எண்ணிக்கை சடுதியாக உயர்ந்தது.

நேற்று மேலும் 86 பேருக்கு கொரோனா தொற்று செய்யப்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் கொரோனா வைரஸ் தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை 571 ஆக உயர்ந்ததுள்ளது.



## இந்தியாவில் தொற்று தொடர்ந்து அதிகரிப்பு

இந்தியாவில் 274 மாவட்டங்களில் 3 ஆயிரத்து 558 பேர் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தியா முழுவதும் 21 நாள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், கொரோனா தொற்று அறிகுறியுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு அடுத்தடுத்து நோய்த் தொற்று உறுதி செய்யப்படுவதால் கடந்த சில நாட்களாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது.

இந்த நிலையில், இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை ஞாயிறு மாலை வரை 3 ஆயிரத்து 558 ஆக உயர்ந்துள்ளது என மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும் இதுகுறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளர் லாவ் அகர்வால் கூறுகையில் "இந்தியாவில் 274 மாவட்டங்கள் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டுள்ளன. நேற்றில் இருந்து தற்போது வரை 472 பேருக்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நேற்றில் இருந்து 11 பேர் உயிரிழந்துள்ளனர். 267 பேர் இது வரை குணமடைந்துள்ளனர்.

ஊரடங்கு உத்தரவின்போது கடைபிடிப்பதற்கான வழிமுறைகளை மாநில அரசுகள் கடைபிடித்து வருகின்றன. அத்தியாவசிய பொருள்கள் மற்றும் சேவை திருப்திகரகமாக உள்ளது" எனத்தெரிவித்துள்ளார்.

## மோடியின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை மேற்குவங்க முதல்வர் மம்தா புறக்கணிப்பு



இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருவது குறித்து பிரதமர் மோடி 8ஆம் திகதி அனைத்துக் கட்சி தலைவர்களுடன் நடத்தவுள்ள கூட்டத்தை மம்தா புறக்கணிக்க முடிவு செய்துள்ளார்.

கொரோனா பாதிப்பைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பிரதமர் மோடி சமீபத்தில் மாநில முதல் – மந்திரிகளுடன் வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆலோசனை நடத்தினார்.

இந்த நிலையில் பிரதமர் மோடி வருகிற 8ஆம் திகதி அனைத்துக் கட்சி தலைவர்களுடன் ஆலோசனை நடத்துகிறார். நாடாளுமன்றத்தில் 5 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மேல் உள்ள கட்சிகளின் நாடாளுமன்றக் குழுத் தலைவர்களுடன் அன்று காலை 11 மணிக்குக் காணொலி காட்சி மூலம் ஆலோசனை செய்கிறார்.

மோடி அழைப்பு விடுத்துள்ள அனைத்து கட்சி கூட்டத்தை மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி புறக்கணித்துள்ளது.

இதை அந்த கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர்கள் சுதீப் பாண்டோபதாய் ( மக்களவை), டெரிக் ஓ பிரையன் (மேல்சபை) நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சர் பிரகலாத் ஜோஷியிடம் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகி ஒருவர் கூறியதாவது;–

சமூக விலகல் அவசியம் என்பதால் நாடாளுமன்றக் கூட்ட பட்ஜெட் கூட்டத் தொடரை ஒத்தி வைக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண்டதற்கு இந்த அரசு செவிசாய்க்கவில்லை.

இதனால் கடைசி 2 நாள் கூட்டத்தில் பங்கேற்க வில்லை. நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் நாங்கள் கூறிய கருத்துக்கள் மதிக்கப்பட வில்லை. இதனால் பிரதமர் அழைப்பு விடுத்துள்ள இந்த கூட்டத்துக்கு எந்த ஒரு அவசியமும் இல்லை. எனவே இந்த கூட்டத்தை புறக்கணிக்க முடிவு செய்துள்ளோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## பளிங்கு போல் தெளிந்த கங்கை

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக உலகமே முடங்கிப் போயுள்ளதால் சுற்றுச் சூழல் நிலைமைகள் பல நாடுகளிலும் பெரிதும் மேம்பட்டு வருகின்றது. அது போல இந்தியாவின் கங்கை நதியும் இப்போது தெளிந்த நீரோடு காணப்படுகின்றது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இந்தியாவில் கடந்த 25ஆம் திகதியில் இருந்து 21 நாட்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் தொழிற்சாலைகள், வாகனங்கள் மற்றும் மக்கள் போக்குவரத்து முற்றிலும் முடங்கியுள்ளன.

இதனால் காற்றில் உள்ள மாசு பெருமளவில் குறைந்துள்ளது. இதன் காரணமாகப் பஞ்சாப் மாநிலத்தில் இருந்து பார்த்தாலே இமயமலை தெள்ளத்தெளிவாகக் கண்களுக்குக் காட்சி அளிக்கின்றது.

இந்த நிலையில் புனித நதியான கங்கை வாரணாசியில் மலையில் இருந்து விழும் தண்ணீர் எவ்வளவு தூய்மையாக இருக்குமோ, அந்த அளவிற்கு தூய்மையாக காட்சி அளிப்பதாக நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

கங்கை நதி இந்த ஊரடங்கு உத்தரவுக்குப்பின் 40 முதல் 50 சதவிகிதம் தூய்மையடைந்துள்ளது என வேதியியல் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பேராசிரியர் பிகே மிஷ்ரா தெரிவித்தார்.



## சோனியாவுடன் மோடி ஆலோசனை



இந்தியப் பிரதமர் மோடி காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி மற்றும் முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியுடன் ஆலோசனை நடத்தியுனார்.

கொரோனா வைரஸ் இந்தியாவில் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது. இதனால் மத்திய அரசு மாநில அரசுகள் மற்றும் அதிகாரிகளுடன் அடிக்கடி ஆலோசனை நடத்தி வருகிறார்.

இந்த நிலையில் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி மற்றும் முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், முலாயம் சிங் யாதவ், ஆகிலேஷ் யாதவ், மம்தா பானர்ஜி, நவீன் பட்நாயக், சந்திரசேகரராவ், பிகாஷ் சிங் பாதல் ஆகியோருடனும் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மூவாயிரத்தை தாண்டியுள்ளது.



# எச்சரிக்கை!

## இருமல், தும்மலால் மட்டும் கொரோனா வைரஸ் பரவாதாம்...

## இப்படியும் பரவுமாம்!

உலகெங்கிலும் நாளுக்கு நாள் கொரோனா வைரஸின் கோரத்தாண்டவத்தால் ஏராளமான உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன. இன்று வரை உலகில் கொரோனா வைரஸால் 11 லட்சத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 50 ஆயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். 2 லட்சத்திற்கும் அதிகமானோர் இந்த வைரஸ் தொற்றில் இருந்து மீண்டுள்ளனர்.

இத்தகைய கொடிய வைரஸ் குறித்து ஒவ்வொரு நாளும் விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். அதில் ஒருபக்கம் இந்த வைரஸ் குறித்தும், மறுபக்கம் இந்த வைரஸிற்கான தடுப்பு மருந்துகள் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் சமீபத்தில் கொரோனா வைரஸ் தாக்கப்பட்டவர்களின் மூச்சுக்காற்றை சுவாசித்தால் மற்றும் அவர்களுடன் பேசினால் கூட தொற்று ஏற்படக்கூடும் என்று அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கூறியுள்ளார்.

### அறிகுறிகள்

சீனாவின் வுஹான் மாகாணத்தில் தோன்றிய கொரோனா வைரஸ் ஒருவரைத் தாக்கினால், அது பின்வரும் அறிகுறிகளை வெளிக்காட்டும். அவை சளி, இருமல், காய்ச்சல், வறண்ட இருமல்,




தொண்டை வறட்சி, லேசான நெஞ்சு வலி, மூச்சு விடுவதில் சிரமம் போன்றவை. சிலருக்கு இந்த வைரஸ் தொற்றால், வயிற்று பிரச்சினைகளான வயிற்றுப்போக்கு, வயிற்று வலி, செரிமான பிரச்சினைகள் போன்றவற்றை சந்திக்க நேரிடும்.

### புதிய அறிகுறிகள்

இதுவரை கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் சளி, இருமல், காய்ச்சல், வயிற்று பிரச்சினைகள் போன்றவற்றால் அவஸ்தைப்படக் கூடும் என்றுதான் பலரும் நினைத்தோம். ஆனால் இந்த வைரஸ் தாக்கப்பட்ட நோயாளிகளுள் சிலர் நாவில் சுவை தெரியாமல் இருந்ததாவும், அதே சமயம் வாசனை எதுவும் தெரியாமல் இருந்ததாகவும் கூறியதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

### பரவல் முறை

கொரோனா வைரஸ் ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு தும்மல், இருமல் வழியாக பரவக் கூடும் என மருத்துவர்கள் தெரிவித்தனர். அதன் பின் இந்த கொரோனா வைரஸ் வேறு எவ்வாறெல்லாம் பரவக்கூடும் என்று ஆராய்ந்தனர். அதில் கொரோனா வைரஸ் வெளியிடத்தில் ஒவ்வொரு பொருளின் மீதும் எவ்வளவு காலம் வாழும் என்ற ஒரு பட்டியலை ஆய்வாளர்கள் வெளியிட்டனர். கொடிய கொரோனா வைரஸ் தூசுப் படலங்களில் மூன்று மணி நேரம் வரையும், தாமிரம்/செம்பில் நான்கு மணி நேரம் வரையும், அட்டைப்பெட்டியில் 24 மணி நேரம் வரையும், பிளாஸ்டிக் மற்றும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்/எஃகு பொருள்களின் மீது இரண்டு முதல் மூன்று நாள்கள் வரையும் உயிருடன் இருக்கக்கூடியது என ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.



### சமீபத்திய ஆய்வு

புதிய கொரோனா வைரஸ் சாதாரண சுவாசம் மற்றும் பேசுவதன் மூலம் காற்று வழியாக பரவக்கூடும் என்று அமெரிக்காவின் உயர்மட்ட விஞ்ஞானி ஒருவர் கூறினார். எனவே அனைவரும் கட்டாயம் மாஸ்க்குகளைப் பயன்படுத்தப் பரிந்துரைத்தார். தேசிய சுகாதார நிறுவனங்களின் தொற்று நோய்களின் தலைவரான அந்தோனி ஃபாசி, இருமல் மற்றும் தும்மலுக்கு மாறாக, மக்கள் பேசும் போது கூட வைரஸ் உண்மையில் பரவக்கூடும் என்ற சில சமீபத்திய தகவல்கள் காரணமாக மாஸ்க்குகள் குறித்த வழிகாட்டுதல் மாற்றப்படும் என்று கூறினார்.

### கவனம் தேவை

கொரோனா வைரஸால் நோய்வாய்ப்பட்டவர்கள் தங்கள் முகங்களை அவசியம் மறைக்க வேண்டும், அதே போல் அவர்களை வீட்டில் பராமரிப்பவர்களும் பாதுகாப்புடன் இருக்க வேண்டும். இவ்வாறு ஏப்ரல் முதலாம் திகதி தேசிய அறிவியல் அகாடமி (என்.ஏ.எஸ்.) வெள்ளை மாளிகைக்கு ஒரு கடிதத்தை அனுப்பிய பின்னர் ஃபாசியின் கருத்துக்கள் வெளிவந்துள்ளன.


### இன்னும் முடிவுக்கு வரவில்லை

இந்த ஆராய்ச்சி இன்னும் முடிவாக இல்லை என்றாலும், கிடைக்கக்கூடிய ஆய்வுகளின் முடிவுகளைப் பார்க்கும் போது, அது சாதாரண சுவாசத்திலிருந்து வைரஸின் ஏரோசோலைசேனுடன் ஒத்துப்போகின்றன. இப்போது வரை, அமெரிக்க சுகாதார நிறுவனங்கள் கொரோனா வைரஸ் பரவுவதற்கான முதன்மையான வழி சுவாச துளிகளாகும். சுமார் ஒரு மில்லிமீட்டர் விட்டத்தில் தும்மும் போது அல்லது இருமும்போது நோயுற்றவர்களால் வெளியேற்றப் படுகின்றன. அதோடு இவை விரைவாக ஒரு மீற்றர் தொலைவில் தரையில் விழுகின்றன. இவ்வாறு வெளியே விழும் வைரஸ் வெளிப்புறங்களில், அது விழும் பொருளைப் பொறுத்து உயிருடன் இருக்கும் காலமும் வேறுபடும் என்பதால், ஒவ்வொருவரும் சீரான இடைவெளியைப் பின்பற்றுவதோடு, போதிய சுகாதார செயல்களான முகத்தை மாஸ்க்கால் மூடுவது, அடிக்கடி கைகளைக் கழுவுவது போன்றவற்றை அவசியம் பின்பற்ற வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

### மற்றொரு ஆய்வு

சமீபத்தில் நியூ இங்கிலாந்து ஜேர்னல் ஓவ் மெடிசினில் வெளியிடப்பட்ட என்.ஐ.எச். நிதியுதவி ஆய்வில், SARSCoV2 என்னும் கொரோனா வைரஸ் ஒரு ஏரோசோலாக மாறி மூன்று மணி நேரம் வரை காற்றில் இருக்கக்கூடும் என்று கண்டறியப்பட்டது. எதுவாக இருந்தாலும், நாம் முன்னெச்சரிக்கையுடன் பாதுகாப்பான சுகாதார செயல்களைப் பின்பற்றினால், நிச்சயம் கொரோனா வைரஸ் நம் உடலினுள் நுழைவதைத் தடுக்கலாம்.

“ புதிய கொரோனா வைரஸ் சாதாரண சுவாசம் மற்றும் பேசுவதன் மூலம் காற்று வழியாக பரவக்கூடும் என்று அமெரிக்காவின் உயர்மட்ட விஞ்ஞானி ஒருவர் கூறினார். எனவே அனைவரும் கட்டாயம் மாஸ்க்குகளைப் பயன்படுத்தப் பரிந்துரைத்தார். தேசிய சுகாதார நிறுவனங்களின் தொற்று நோய்களின் தலைவரான அந்தோனி ஃபாசி, இருமல் மற்றும் தும்மலுக்கு மாறாக, மக்கள் பேசும் போது கூட வைரஸ் உண்மையில் பரவக் கூடும் என்ற சில சமீபத்திய தகவல்கள் காரணமாக மாஸ்க்குகள் குறித்த வழிகாட்டுதல் மாற்றப்படும் என்று கூறினார். ”



# பொது, சொந்த நலனுக்காகவே வீட்டிற்குள் இன்று முடக்கி ஒடுக்கப்பட்டிருக்கின்றோம்

## குருத்தோலை ஞாயிறு உரையில் மன்னார் ஆயர்



கொரோனா வைரஸ் நோயினால் நாம் அச்சுறுத்தப் பட்டாலும் நாம் பல சவால்களை ஏற்று செயல்பட நேர்ந்தாலும் நாங்கள் இறை யேசுவில் வைத்திருக்கும் நம்பிக்கையிலும், விசுவாசத்திலும் எதிர் நோக்குடன் வாழ்வோம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

கிறிஸ்தவர்களின் தவக்காலத்தையொட்டிய பரிசுத்த வாரம் நேற்று ஆரம்பமாகியது. மன்னார் தூய செபஸ்தியார் புனித பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் நேற்றுக் காலை 7 மணியளவில் குருத்தோலை ஞாயிறு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதன் போது மறை உரை ஆற்றுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்றைய தினம் கத்தோலிக்கர்கள் ஆகிய எங்களுக்கு ஆண்டவரின் திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு. நாங்கள் எமது வீடுகளில் இருந்து வெளியில் செல்ல முடியாத ஒரு நிலையில் உள்ளோம்.

அப்படியான ஒரு நிலை மன்னாரில் இருக்கும் உங்களுக்கு மாத்திரம் இல்லை, மாறாக உலகம் முழுவதும் உள்ள மனித குலத்திற்கே ஏற்பட்டிருக்கும் ஒரு நிலை. காரணம் என்ன என்ற கேள்விக்கு நீங்கள் என்ன பதில் கொடுப்பீர்கள்? எங்கள் கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸ் முழு உலகத்தையும் கொடிய நோயினால் வாட்டி வதைக்கின்றது.

இந்த நிலையிலே நீங்களும் நாங்களும் பொது நல்லிணக்கத்திற்காகவும் எங்களுடைய சொந்த நலனுக்காகவும் வீட்டிற்குள் முடக்கி ஒடுக்கப்பட்டிருக்கின்றோம். இந்த நோயினால் நாம் அச்சுறுத்தப்பட்டாலும், நாம் பல சவால்களை ஏற்று செயல் பட நேர்ந்தாலும், நாங்கள் இறை யேசுவில் வைத்திருக்கும் நம்பிக்கையிலும், விசுவாசத்திலும் எதிர் நோக்குடன் வாழ்வோம்.

கொரோனா வைரஸ் நோய் மக்களை அடக்கி ஒடுக்கி வைத்திருக்கும் இவ் வேளையில் புனித வாரத்தை நாம் ஆரம்பிக்கின்றோம். இக்கால கட்டத்தில் நாங்கள் என்ன வகையில் யேசுவின் திருப்பாடுகள், வேதனைகள், சிலுவை மரணத்தைப் பற்றி தியானித்து அவரோடு இணையலாம் எனச் சிந்திப்போம். தவக் காலத்திலே நாற்பது நாள்களாக எப்படி செபம்,தவம்,தியானம் என்கின்ற முயற்சிகளினால் எம்மை தூய்மை படுத்த முன்வந்தாரே அவைகளை நாங்கள் இப் புனித வாரத்திலே ஆழப்படுத்துவோம். முற்று முழுதாக கொரோனாவின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தவும், உலகம் வாழ் மக்கள் மீண்டும் நாளாந்த வாழ்க்கைக்கு திரும்பவும், எமக்கு இறை தந்தையின் இரக்கத்தையும், அன்பையும் பெற்றுத்தருமாறு உருக்கமாக செபிப்போம். - எனத் தெரிவித்தார்.

திருப்பலி முடிவுற்ற நிலையில் மன்னார் மாவட்டத்தின் பாதுகாவலியாம் தூய செபஸ்தியாரின் திருச் சொரூப ஆசீர்வாதம் இறை மக்களுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயாரினால் வாழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

## முந்தலில் நேற்றுத் திடீரென வீசிய கடுங்காற்றில் 104 வீடுகள் சேதம்





புத்தளம் மாவட்டத்தில் உள்ள முந்தல் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்றுத் திடீரென வீசிய கடுங்காற்றுக் காரணமாக, 104 வீடுகளுக்குச் சேதம் எற்பட்டுள்ளன என மாவட்டச் செயலாளர் சந்திரசிறி பண்டார தெரிவித்தார்.

பலத்த மழையுடன் வீசிய கடும் காற்றையடுத்து, ஆனமடுவ, மஹகும்புக்கடவல, நவத்தேகம பகுதிகளிலுள்ள மரங்கள் வீடுகளின் மீது முறிந்து விழுந்துள்ளதால், பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

மஹகும்புக்கடவல பகுதியிலுள்ள வீடுகளுக்கே இதனால் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அங்குள்ள சுமார் 50 வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதுடன், 142 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நவத்தேகம பிரதேச செயலகப் பிரிவில் 26 வீடுகள் சேதமடைந்துள்ளமையுடன், 36 குடும்பங்களைச் சேர்ந்த 101 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆனமடுவ பகுதியில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 109 பேரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 10,000 ரூபாய் நட்டஈடு வழங்க, அனர்த்த முகாமைத்துவப் பிரிவு முதற்கட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

## புத்தளம் தனிமை மையத்தில் 3 சிறுவர்களுக்குக் கொரோனா

புத்தளம் சாஹிரா கல்லூரியிலுள்ள தனிமைப்படுத்தல் மையத்தில் மூன்று சிறுவர்கள் கொரோனா தொற்றிற்கு இலக்கானது கண்டறியப்பட்டுள்ளது.

மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தினுஸா பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

மலேசியா, இந்தோனேசியாவுக்குச் சென்று வந்த ஆன்மீகக் குழுவில் இடம் பெற்ற புத்தளம் கடையன்குளத்தைச் சேர்ந்தவர் கொரோனா தொற்றிற்கு இலக்கானதைத் தொடர்ந்து, அந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள் புத்தளம் சாஹிரா கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப் படுத்தல் மையத்திற்குக் கொண்டு செல்லப் பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா அந்தப் பகுதியில் பலரை தாக்கியிருந்தது அங்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சாஹிரா கல்லூரியிலுள்ள தனிமைப்படுத்தல் மையத்திலுள்ளவர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்படி, நேற்று அந்த தனிமைப்படுத்தல் மையத்திலுள்ள மூன்று சிறார்களுக்கு கொரோனா கண்டறியப்பட்டது. 11 வயதான சிறுவன், 9, 5 வயதுடைய இரண்டு சிறுமிகள் தொற்றிற்குள்ளானமை கண்டறியப்பட்டது.

அவர்கள் முல்லேரியா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள்.

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 2,362 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்







மட்டக்களப்பு,ஏப்.06

மட்டக்களப்பு மாவட்டத்தில், இதுவரை 2,362 பேர் தங்களின் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர் என்று பிராந்திய சுகாதார பணிப்பாளர் எச்.எம்.அச்சுதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில், செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வேலைகளுக்காகச் சென்று திரும்பிய 1,011 பேரும் மட்டக்களப்பில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு, வேலை, கல்வி நடவடிக்கைகளுக்காகவும் உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று வந்தவர்கள் 1,351 பேருமாக மொத்தம் 2,362 பேர், மட்டக்களப்பு மாவட்டத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றார்.

அவர்கள் தொடர்ச்சியான மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர் என்றும் அசாதாரண நிலை ஏற்படும்போது, உடனடியாக மருத்துவ நடவடிக்கை எடுப்பதற்கு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை தயாரகவுள்ளதாகவும் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி கலாரஞ்சினி கணேசலிங்கம் தெரிவித்தார்.

96 படுக்கைகளைக் கொண்ட விடுதி ஒன்று, மூன்று வாரங்களில் தயார்ப்படுத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் சுகாதர அமைச்சு மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

'மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா நோய் சந்தேக நபர்களாக, 36 பேர் இதுவரை அனுமதிக்கப்பட்டு அதில் தனிமைப்படுத்தலுக்காக 5 பேர் அனுப்பப்பட்டனர்.

ஒருவருக்கு மாத்திரம் கொரோனா தொற்று உறுத்திப்படுத்தப்பட்டது. அவர், கொழும்பு தொற்றுநோய் தடுப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிசைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்' என்றார்.

சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

தலைமை காரியாலயம்,
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலனை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 221 5472
07 301 3012

# கொரோனா நோயாளர்களைக் கையாள வெலிக்கந்தை ஆஸ்பத்திரியில் ரோபோ

கொழும்பு, ஏப்.06

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் மருத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரோபோ இயந்திரம் தயாரிக்கப்பட்டு இப்போது அது பயன்படுத்தப்படுகின்றது.

பொலனறுவை வெலிக்கந்தை வைத்திய சாலையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கான அன்றாட மருத்துவ நடவடிக்கைகளுக்கு வசதியாக Mas Intimates PVT Company (MAS)தயாரித்த ரோபோ இயந்திரம் நன்கொடையாக நேற்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்த ரோபோ பயன்படுத்தப்படும் என்றுபொலனறுவைபொதுமருத்துவமனையின் இயக்குநர் வைத்தியர் சம்பத் இந்திக குமாரா தெரிவித்துள்ளார்.





# கோட்டாவை இன்று சந்திக்கின்றார் சஜித்

கொழும்பு, ஏப். 06

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்திக்கவுள்ளனர்.

கொரோனா தொற்று தொடர்பில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து, இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதற்கான கோரிக்கை சஜித் பிரேமதாஸவால் முன்வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா தொற்று பரவலின் பின்னர், ஜனாதிபதியுடன் சஜித் பிரேமதாஸ முன்னெடுக்கும் முதலாவது சந்திப்பு இதுவாகும்.

# 75 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கல்

கிளிநொச்சி, ஏப். 06

சுவிஸ் வாழ் தமிழ் மக்களின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இரணைமாதாநகர் கிராமத்தில் வசிக்கும் பொருளாதார வறுமை மிக்க 75 குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் வேண்டுகோளுக்கு இணங்க சுவிஸ் நாட்டில் வாழும் தமிழ் மக்களின் நிதி உதவியில் மேற்படி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.



காலைக்கதிர் Kalaikathir

## கமத் தொழில்




தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

இன்று (06/04/2020) தலைப்பு
கமத் தொழில்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட பொதுச் சந்தைகள் மூடப்பட்டிருக்குமாம்

## மாநகர முதல்வர் அதாஉல்லா அஹமட் சக்கி அறிவிப்பு

அம்பாறை, அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட பொதுச் சந்தைகள், மறுஅறிவித்தல் வரை தற்காலிகமாகத் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும் என்று, அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அஹமட் சக்கி, நேற்றுத் தெரிவித்தார்.

இன்று திங்கட்கிழமை காலை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் போது, பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான அத்தியவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு, அக்கரைப்பற்று சிறுவர் பூங்கா, அக்கரைப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட பட்டியடிப்பிட்டி பொதுவிளையாட்டு மைதானம் என்பவற்றில் தற்காலிக சந்தை வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பொதுமக்கள் கூடி நிற்காமல், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தங்களுக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்து, உடனடியாக வீடு திரும்ப வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அமுலில் உள்ள ஊரடங்குச்சட்டம், தற்காலிகமாக தளர்த்தப்படுகின்ற வேளையில், பொதுச் சந்தைகள், வர்த்தக நிலையங்கள், கடைகள் ஏதும் திறக்கக் கூடாதெனவும், இக்காலப்பகுதியில் பொதுமக்கள் தமக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களைத் தமது வீடுகளுக்கு முன்னால் வருகின்ற நடமாடும் விற்பனை வியாபாரிகளிடம் கொள்வனவு செய்தற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படுகின்ற போது, அவசிய தேவையின்றி பொதுமக்கள் எவரும் வீட்டில் இருந்து வெளியேறி, வீதிகளில் நடமாட வேண்டாம் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

மேற்படி அறிவுறுத்தல்களை பொதுமக்கள் முழுமையாகப் பின்பற்றுவதன் மூலம் எமது பகுதியில் கொடிய ஆட்கொல்லியான கொரோனா வைரஸ் பரவலை முற்றாக தடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்வதாக, மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் சக்கி மேலும் தெரிவித்தார்.

# பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு கொரோனா தொற்று!

குருநாகல் பன்னல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்த நபர் ஹெரோய்னை தம்வசம் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைதுசெய்யப்பட்டார்.

இந்த நிலையில் அவர் கடும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டமையை அடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அப்போதே அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

இதேவேளை தாம் இத்தாலியில் இருந்து இலங்கைக்கு வந்த ஒருவருடன் சேர்ந்திருந்து மதுபானம் அருந்தினார் என இந்த கொரோனா வைரஸ் தொற்றாளி பொது சுகாதார பரிசோதகரிடம் தெரிவித்துள்ளார்.

# தினம் ஒரு தலைப்பு



## சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்


படம் 1


படம் 2

நேற்றைய தினம் அதி களவான மாணவர்கள் 'மாட்டு வண்டி' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பி யிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிக மாக தெரிவுசெய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

படம் 1
வரைந்தவர்
அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

படம் 2
வரைந்தவர்
ராஜன் அஸ்வின் – தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.
இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு – **'கமத் தொழில்'**

**வ. காசினி - தரம் 2**
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

**சிறிகாந்த் துவாரகன் - தரம் 9**
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்

**பா. தனுபன் - தரம் 6**
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**பா. ஹரிஷ் - தரம் 4**
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

**பா. பிரியேஷ் - தரம் 1**
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

**தி. கோவெழிலன் - தரம் 4**
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

**லோ. நித்திலா - தரம் 4**
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

**எஸ். அக்ஷன்யா - தரம் 4**
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

**எஸ். ஹரினி - தரம் 2**
யா/ புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

**லோ. சிவயாணு - தரம் 7**
யாழ். இந்து மகளிர் கல்லூரி

**கே. தர்சன் - தரம் 6**
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**மயூரன் தேனுகா - தரம் 10**
யா/ வேலணை மத்திய கல்லூரி

**என். எம். நிமாஸ் - தரம் 9**
கல்கமுவ மாதிரி மத்திய மகா வித்தியாலயம்

**சி. சிவகலை - தரம் 4**
யா/இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

**வசந்தரூபன் அபிசன் - தரம் 3**
சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை

**கு. ஆதிகேசவன் - தரம் 10**
யா/ ஹாட்லிக் கல்லூரி

**சுந்தரலிங்கம் பிரவீன் - தரம் 10**
யா/மீசாலைவீரசிங்கம்வித்தியாலயம்

**கே. திகேசன் - தரம் 10**
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**த. சம்யுக்தா - தரம் 3**
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

**த. சுதந்திரா - தரம் 6**
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

**டி. ஹரிஸ்மன் - தரம் 8**
புனித பத்திரியர் கல்லூரி

**குகராஜ் லிதன்யசைலி - தரம் 3**
கிளிநொச்சிமத்தியஆரம்பபாடசாலை

**புஸ்பலிங்கம் ஆரணன் - தரம் 6**
கொக்குவில் இந்துக் கல்லூரி



காலைக்கதிர்
Kalaikathir



# இந்தியா ஒளிர்ந்தது!



பிரதமர் நரேந்திர மோடி





இந்திய குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்

பிரதமர் நரேந்திர மோடியின் வேண்டுகோளை ஏற்று நாட்டு மக்கள் அனைவரும் வீடுகளிலும், கட்டடங்களிலும் விளக்கேற்றினர்.

கொரோனா நோய்த்தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் தீவிரப்படுத்தி வருகின்றன. அதன் ஒரு பகுதியாக நாடு முழுவதும் வரும் 14ஆம் தேதி வரை ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், மக்கள் தனிமையில் இல்லாதமையை உணர்த்தவும் நோய்த் தொற்றுக்கு எதிராக 130 கோடி மக்களும் ஒன்றுபட்டு இருப்பதை உணர்த்தவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணி முதல் 9 நிமிடங்களுக்கு வீட்டிலுள்ள மின் விளக்குளை அணைத்துவிட்டு, அகல் விளக்கு போன்றவற்றை ஒளிரச் செய்ய வேண்டும் என்று காணொலி வாயிலாக பிரதமர் மோடி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

பிரதமரின் இந்த வேண்டுகோளுக்கு இணங்க நாட்டு மக்கள் அனைவரும் வீடுகளிலும், கட்டங்களிலும் ஒளியேற்றினர். நடிகர் ரஜினிகாந்த் அவருடைய சென்னை போயஸ் கார்டன் இல்லத்தின் வெளியே வந்து மெழுகுவர்த்தி ஏந்தினார்.



நடிகர் ரஜினிகாந்த்



மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா



குடியரசுத் துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு



மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன்





பாஜக தேசியத் தலைவர் ஜெ.பி. நட்டா





# இருமல், தடிமல், சுவாசப் பிரச்சினைகள் இருக்குமானால் ஆஸ்பத்திரிக்குப் போகாதீர்: 1390க்கு அழைப்பு எடுங்கள்!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க விநயமாக வேண்டுகோள்



கொழும்பு, ஏப்.06

இருமல், தடிமல் மற்றும் சுவாச பிரச்சினைகள் இருந்தால், 1390 என்றதொலைபேசி இலக்கத்தை அழைக்குமாறும் உடனே மருத்துவமனைக்குச் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க இவ்வறிவிப்பை விடுத்துள்ளார்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் 24 மணி நேரமும் செயற்படும் 1390 எனும் தொலைபேசியை தொடர்பு கொண்டு மருத்துவ ஆலோசனைகளை பெறவும், உரிய சேவைகளை ஒருங்கிணைக்கவும் மருத்துவர்கள் தயார் நிலையில் இருக்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் காரணமான கொவிட் -19 நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அதிகளவில் தேவைப்படுவதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

நோய் தொற்றியிருப்பதாக சந்தேகிக்கப்படும் நபர்களுக்காக விசேட திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால், மக்களின் நடமாட்டத்தை குறைப்பதற்காகவும், ஏனையோருக்கு நோய் தொற்றாதிருப்பதை குறைக்கவும், இலகுவானதும் உரிய சேவை மற்றும் ஆலோசனையை வழங்குவதற்காகவும், இம்மத்திய நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் 1390 இனை அழைக்கும் நோயாளியின் மருத்துவ நிலை குறித்து விசாரித்த பின்னர், தேவைப்பட்டால், 1990 சுவசெரிய அம்பியுலன்ஸ் சேவையையும் இந்த மையம் வழங்கும்.

எனவே, இந்நாள் களில் உங்களுக்கு இருமல், சளி மற்றும் சுவாசப் பிரச்சினைகள் இருந்தால், உடனடி யாக 1390 ஐ தொலைபேசியில் அழையுங்கள் என அனில் ஜாசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# இரத்தினபுரி ஆஸ்பத்திரியிலும் கொரோனா தொற்றுச் சோதன



கொவிட் 19 என்றழைக்கப்படும் கொரோனா தொற்றுக்கான பரிசோதனை, இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில், இன்று முதல் முன்னெடுக்கப்படும் என்று, இரத்தினபுரி வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அநோஜ் ரொட்ரிகோ தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் அலுவகத்தில், சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில், நேற்று முன்தினம் நடைபெற்ற கொரோனா ஒழிப்பு தொடர்பான விசேட கலந்தரையாலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர் –

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வைத்திய பிரிவு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக பெற்றுகொடுக்கப்பட்டுள்ள ஊனீயூ இயந்திரம், மேற்படி பல்கலைக்கழகத்தின் உபவேந்தர்களால், இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு, தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இயந்திரத்தின் மூலம் தேவையான பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக சப்ரகமுவ பல்கலைகழக குழுவினர், மேற்படி வைத்தியசாலை தரப்பினருக்கு உதவும் முகமாக இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்துள்ளனர்.

அதனடிப்படையில், கொவிட் 19 தொடர்பாக கொழும்பில் செய்யப்படும் பரிசோதனை, திங்கட்கிழமை முதல் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

இது குறித்து கருத்து தெரிவித்த மாகாண ஆளுநர், கொவிட் 19 தொடர்பாக பரிசோதனை செய்வதற்காக, கேகாலை மாட்ட வைத்தியசாலைக்கும் பரிசோதனை இயந்திரங்கள் விரைவில் பெற்று கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

JEGAN PHARMACY
WE ARE WITH YOU
உங்கள் வீட்டுக்கு மருந்துகள் கொண்டுவந்து தரப்படும்
Free Home Delivery
within 05km Jaffna
Minimum Order of Rs. 500/- Only
Delivery Timing : 10:00 AM to 8:00 PM
Upload your Prescription to
0777283794
0779261780

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் – இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576
சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.04.2020 இல் வெளியிடப்பெற்றது.